சுற்று நிருப இலக்கம் : 11/2017

கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு (மே.மா.)
இலக்கம் : 109, 4 ஆவது மாடி,
பிரதான வீதி,
பத்தரமுல்ல.
2017.06.06

மேல் மாகாணத்தின் அனைத்து பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்,
மாவட்ட கிராமிய வங்கி ஒன்றியங்கள், சணச சங்கங்கள், மாவட்ட கூட்டுறவுச் சபைகள் மற்றும்
ஏனைய அனைத்து பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்க தலைவர்களுக்கும்,

**கூட்டுறவுச் சங்கம்/ சமித்தி ஒன்றினை மூடும்போது நிரந்தர ஊழியர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குதல்.**

தலைப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக மேல்மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்ட 2014-01-06 ஆம் தேதியிட்ட 02/2014 ஆம் சுற்று நிருபத்தின், II ஆவது பிரிவு மற்றும் VII ஆவது பிரிவுகளுக்கு கீழ் வரும் உப பிரிவுகளை உள்ளடக்கி திருத்தம் செய்ய ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

**II ஆம் பிரிவு**

(அ) நஷ்ட ஈட்டு விண்ணப்பப் படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம் / சங்கம் மூடப்படும் தினம் / சங்கம் கலைக்கப்படும் தினம் ஆகிய தினங்களுள் முதல் வரும் தினத்தில் ஊழியருக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்த கொடுப்பனவுகள் உள்ளடக்கிய அடிப்படைச் சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டே நஷ்ட ஈட்டுத் தொகை கணிக்கப்படல் வேண்டும். இங்கு முறையான அங்கீகாரத்துடன் வழங்கப்படும் கொடுப்பனவுகள் மாத்திரமே இதில் கொடுப்பனவாகக் கருதப்படல் வேண்டும்.

(ஆ) ஏதேனுமொரு காரணத்தினால் சேவைக்காலம் முடிவடைந்து ஒரு வருட காலம் நிறைவடையும் வரை மேற் குறிப்பிட்டவாறு நஷ்ட ஈடு செலுத்தப்படாதவிடத்து, நஷ்ட ஈடு செலுத்தப்படும் நாள் வரையான நிறைவடைந்த பூர்த்தியான வருடங்களிற்குரிய சம்பள அதிகரிப்பினை ஈட்டிக் கொண்டதாகக் கருதி இறுதிச் சம்பளப் படி நிலை தீர்மானிக்கப்படல் அவசியம் என்பதுடன், அக்காலப் பகுதியினுள் சம்பள மறுசீரமைப்பு இடம் பெற்றிருந்தால் புதிய சம்பள அளவுத் திட்டத்திற்கமைய சம்பளப் பரிமாற்றத்தினை மேற் கொண்டு நஷ்ட ஈடு செலுத்துவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்படும் சம்பளம் தீர்மானிக்கப்படல் அவசியம். அவ்வாறு தீர்மானிக்கப்படும் சம்பளம், நஷ்ட ஈட்டுக் கணிப்பீட்டுச் செயற்பாட்டிற்கு மாத்திரமே உபயோகிக்கப்படும் என்பதுடன் அதற்காக நிலுவைச் சம்பளம் பெற்றுக் கொள்ள இயலாது.

**VII ஆம் பிரிவு**

(அ) நஷ்ட ஈட்டைக் கணிப்பதில், ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும், உள்ளடக்கப்பட்ட கூட்டு சம்பளமே, மாதாந்த சம்பளமாக கருதப்படல் அவசியம். அது ஊழியர் இறுதியாகப் பெற்றுக் கொண்ட சம்பளம் அல்லது மேல் II ஆம் பிரிவின் (ஆ) பிரகாரம் தீர்மானிக்கப்பட்ட சம்பளம் ஆகியவற்றில் ஊழியருக்கு அதிக பயனுடைய சம்பளமாக இருத்தல் அவசியம்.

ஆணைக்குழு நியதிகளின்படி

எஸ்.ஏ.எல்.ரங்கனீ
செயலாளர்
கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக் குழு
மேல் மாகாணம்

பிரதிகள் :

01. பிரதான செயலாளர், மேல் மாகாணம்.
02. செயலாளர், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, மேல் மாகாணம்.
03. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/ சங்கப் பதிவாளர், மேல் மாகாணம்.
04. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - (கொழும்பு/கம்பஹா/களுத்துறை)
05. பணிப்பாளர், மேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டம்.
06. செயலாளர், மத்திய அரசின் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு.
07. அனைத்து மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுச் செயலாளர்கள்.
08. அனைத்து தொழிற் சங்கங்கள் ஒன்றியங்கள்